விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 50 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 8 இதழ் 70
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 21-4-1994

மட்டுநகர் சம்பவம் இராணுவத்தினர் சிலர் கைதாகி விசாரணை!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பனிச்சங்கேணியில் கடந்த திங்கட்கிழமை இராணுவத்தினர் நடாத்திய கெடுபிடி தாக்குதல்கள் குறித்து இராணுவத்தினர் மீது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாம். சில இராணுவத்தினர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் வாய்மூல வழக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

கடந்த திங்கட்கிழமை இக்கிராமத்தினுள் நுழைந்த இராணுவத்தினர் அப்பாவித் தமிழ் மக்களை கெடுபிடிகளுக்கு உட்படுத்தினர். இதனால் ஒரு

(6-ம் பக்கம் பார்க்க)

மணலாறு தாக்குதலில் இரு இராணுவம் பலி

(கொழும்பு)

மணலாறுப் பகுதியில் நேற்றுக்காலை விடுதலைப்புலிகள் மேற்கொண்ட திடீர் தாக்குதலில் இரு இராணுவத்தினர் உயிரிழந்தனர். சிலர் படுகாயமடைந்தனர்.

கண்ணிவெடி அகற்றும் வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இராணுவத்தினர் மீது புலிகள் திடீர்த் தாக்குதலை நடாத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்தவாரமும் இப்பகுதியில் புலிகள் நடாத்திய திடீர் தாக்குதலில் இரு படையினர் கொல்லப்பட்டும் ஐவர் காயமடைந்ததும் தெரிந்ததே.

ம-தி

எல்லாளன் படை எச்சரிக்கை பற்றி வெளிநாட்டுத் தூதர்களுக்கு அமைச்சர் ஹமீத் விளக்கம்

நிலைமை மோசமடையலாம்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள சுமார் இருபது வெளிநாட்டுத் தூதர்களை அழைத்த அமைச்சர் ஏ. சி. எஸ் ஹமீத் வெளிநாட்டவர்களுக்கும், வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கும் எதிராக 'எல்லாளன் படை' விடுத்துள்ள எச்சரிக்கைகள் குறித்து நேற்று விளக்கமளித்துள்ளார்.

எல்லாளன் படையின் எச்சரிக்கையால் வெளிநாட்டு வணிகங்களும் முதலீட்டாளர்களும் பெரும் அச்சமடைந்துள்ளனர். இதனையடுத்து இன்று இந்திய செல்லவுள்ள வெளிநாட்டு அமைச்சர் ஹமீத் நேற்றுகாலை வெளிநாட்டு தூதர்களை சந்தித்துள்ளார்.

கனடா, அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, சுவீடன், நெதர்லாந்து, பின்லாந்து,

(6-ம் பக்கம் பார்க்க)

'எல்லாளன் படை' குறித்து பல வெளிநாடுகள் கலக்கம்

(கொழும்பு)

'எல்லாளன்படை' வெளிநாட்டு முதலீட்டாளர்களும், உல்லாசப் பயணிகளும் விடுத்த எச்சரிக்கையால் பல நாடுகள் இவ்விடயம் குறித்து கலக்கமடைந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த எச்சரிக்கை குறித்த இலங்கையிலுள்ள முதலீட்டாளர்களிடம் அந்தந்த நாடுகள் எச்சரித்திருப்பதாகவும் இவர்களதும் நிறுவனங்களினதும் பாதுகாப்பு குறித்து இலங்கை அரசிடம் பிரஸ்தாபிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எல்லாளன் படையின் எச்சரிக்கையை படையினர் தரப்பு பாரதூரமானதாக

(6-ம் பக்கம் பார்க்க)

புலிகள் மீதான தடைபிரேரணை தமிழகத்தில் நிறைவேறியது

(சென்னை)

இந்தியாவில் விடுதலைப் புலிகள் மீதான தடையை மேலும் இரண்டு ஆண்டுகள் நீடிக்கக் கோரும் தமிழக அரசின் தீர்மானம் நேற்று தமிழகச் சட்டப் பேரவையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானத்தை முன்மொழிந்த முதலமைச்சர் ஜெயலலிதா பேசுகையில்: விடுதலைப்புலிகளின் நோக்கங்களும் செயற்பாடுகளும், இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்கும் இறையாண்மைக்கும் தொடர்ந்தும் ஊறுவிளைவிப்பனவையாகவே உள்ளன. ஒழுங்கு விட்டு செயல் திறனையும் வசதியையும் மீண்டும் ஏற்படுத்திக்கொள்ள புலிகள் தங்கள் அனுதாபிகள்மூலம் முயற்சிக்கின்றனர்.

(6-ம் பக்கம் பார்க்க)

தமிழக அரசு தப்பிக்க முயற்சி

(சென்னை)

தமிழக அரசு கொண்டு வந்துள்ள விடுதலைப்புலிகள் மீதான தடை நீடிப்பு பிரேரணையானது நாளை தப்பித்துக் கொள்வதற்காகவே கொண்டு வரப்பட்டது.

இவ்வாறு தமிழக எதிர்க்கட்சித் தலைவர் எம். ஆர். பாலகப்பிரமணியம் குற்றம் சாட்டியுள்ளார். இதுபற்றி அவர் மேலும் கூறுகையில்.

தமிழ்நாடுக் சட்டமும்,

(6-ம் பக்கம் பார்க்க)

அமைச்சர் ஹமீத் இந்தியா செல்கிறார்

(கொழும்பு)

இந்திய இலங்கை கூட்டுக் குழு கூட்டத்தில் கலந்து கொள்ள அமைச்சர் ஹமீத் தலைமையான இலங்கைக்குழு இன்று இந்தியா செல்கிறது.

இக்கூட்டத்தில் இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக-பொருளாதார இடை

(6-ம் பக்கம் பார்க்க)

மன்னாரில்

விமானத் தாக்குதல் இருவர் உயிரிழப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் சில கிராமங்கள் மீது குண்டு வீச்சு விமானங்கள் மேற்கொண்ட கண்மூடித்தனமான குண்டு வீச்சுகளினால். இருவர் கொல்லப்பட்டதுடன் எண்மர் படுகாயமடைந்தனர். பல வீடுகளும் பலத்த சேதமடைந்

(6-ம் பக்கம் பார்க்க)

திஸமகாராமவில்

பொலிஸ் அதிபர் மீது வழக்கு தாக்கல்

(கொழும்பு)

திசமஹாராம பொலிஸ் அதிபருக்கு எதிராக நேற்று திசமகாரகநீதிமன்றில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டது.

தென்மாகாணசபைத் தேர்தல் காலத்தில்போது மொனருகல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுமிதா டீ ஜயசேனாவை துப்பாக்கியால் சுடப்போவதாக மிரட்டினார் என்றும் பொலிசார் எத்தனித்தார் என்றும் அவர் மீது குற்றம் சுமத்தியே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

இது போன்ற பல சம்பவங்களை நடவடிக்கைகளில் திசமகாராமபொலிஸ் அதிபர் காமினிசுபேகிரம் தென்மாகாணசபைத் தேர்தல் காலத்தில் போது புரிந்துள்ளார் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ம-தி

மனித உரிமைகள் விவகாரம்;

ஜெனிவா மாநாட்டில் கூறியதை அரசு அமுல் செய்யவில்லை

(கொழும்பு)

ஜெனிவா நகரில் நடைபெற்ற மனித உரிமை குழுக் கூட்டத்தில் இலங்கை மீது தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து இதுவரை விசாரிக்கப்படாதது ஏன்? என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. நிமல் கிறிபால டீ சில்வா பிரதம நீதியரசர் டம் நாடாளுமன்றத்தில் கேட்டுள்ளார்.

எதிர்பிலிப்பிடிகாரவில்

(6-ம் பக்கம் பார்க்க)

செய்திச்சிதறல்

வரிவிளம்பரம்

O/L கணிதம் 94

Distinction, Credit பெற பேறுடைய இதுவரையும் சித்தியடையாதோரும் (ஆண்டு-9, 10) உயர்தர ஏற்பிக்கப்படுவர் ஆசிரியர் B. Sc 85. சிவன் கோவிலடி, திருநெல்வேலி. (ஈ-961)

ஆசிரியர் வேண்டும்

(ஆங்கிலம் விஞ்ஞானம் கணிதமானியில் உள்ளடக்கியது) சித்தியடைந்தவர். தொகையாகவும் சிலவறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். மகிமிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம், ஸ்ரீ சாந்தா புத்தகசாலை, யாழ்ப்பாணம், ஸ்ரீ சாந்தா புத்தகசாலை நல்லூர். (ஏ-4017)

கணக்குப் பதிவாளர் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

கணக்குப் பதிவாளர் பதவி உயர்வுக்கான பரீட்சை மே மாதம் 7-ம் திகதி கொழும்பில் மட்டும் நடைபெறுமென கொழும்பிலிருந்து யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. -162

O/L - 1994
DAY CLASS
ஆரம்பம்:
21-04-94
BECON
யாழ்ப்பாணம்.
(ஈ-971)

இடமாற்றம்

(பண்டத்தரிப்பு)

தொண்டைமானாறு அரசினர் மத்திய மருந்தகசாலை பொறுப்பதிகாரியாக டேவிட்டாறியட்டாட்டி சென்னரி கிழக்கு இம்மாதம் தொடக்கம் வவுனியாவிலுள்ள அரசினர் கிராமிய வைத்திய சாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். -72-இ

உலர் உணவு நிவாரணம்

(அச்சுவேலி)

இடம் பெயர்ந்தோர்களுக்கான பெரியவிளாத மாதவடைசி 2 வரை 12 பி. புகுளிளுக்கு இலவச உலர் உணவு விநியோகம் கடந்த 7-ந் திகதி முதல் சகல கூப்பிடுதூரவுச் சங்கக் கிளைகளிலும் வழங்கப்பட்டு வருகின்றது.

மனையியல் கண்காட்சி

(அச்சுவேலி)

யாழ். செஞ்சிலுவைச் இளைஞர் முன்னணி எழுத்திலாக எதிர்வரும் 23 ம் திகதி தொடக்கம் 25ம் திகதி வரை காலை 9மணி தொடக்கம் மாலை 5 மணி வரை யாழ். புனித சாவிஸ் மகளிர் தியாலய மண்டபத்தில் "மனையியல் கண்காட்சி" நடைபெறவுள்ளது. -59

விபத்தில் காயம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பூநகரி சந்தியில் நடைபெற்ற மோதி டார் சைக்கிள் மோதி விபத்தில் மோட்டார் சைக்கிளிலிருந்தவர் பலத்த காயங்களுக்குள்ளாகி பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின் யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். புலோலி சாரையடியைச் சேர்ந்த இராஜேந்திரம் பஸ்கரன் என்பவரே காயமடைந்தவராவார். -52

பொன்விழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வடஇந்து மகளிர் கல்லூரியின் "பொன் விழாவும்" பொன்விழாமலர் வெளியீடும் யூன் மாதம் நடைபெறவுள்ளது. இப் பொன் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்கு கல்லூரி அதிபர் திருமதி சோ. குமாரசாமி தலைமையில் பொன் விழா சபையும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. -52

விளையாட்டு மைதானம்

(அச்சுவேலி)

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலைக்கு புதிய விளையாட்டு மைதானம் மாவிரர் நினைவாக நிறுவப்படவுள்ளது. புதிய விளையாட்டு மைதானத்திற்கான காணியை மேஜர் ஆர்பேக்கி (ஓ ரூபநிதி) தந்தையார் திரு. சந்தையா ஆன்பளிப்பாக வழங்கியுள்ளார். -74

பேச்சுப்போட்டி நடாத்த ஏற்பாடு

(கொழும்புத்துறை)

சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலய வருடாந்த உற்சவத்தினை முன்னிட்டு சரசாலை வடக்கு மன்றம் சரசாலை மாணவர்களிடையே ஏழு பிரிவாக ஓர் பேச்சுப் போட்டியை அடுத்த மாத முதல் வாரத்தில் நடாத்தவுள்ளது. -154

நிக்ஸனுக்கு கடும் சுகயீனம்

(நியூயோர்க்)

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி நிக்ஸன் கடும் சுகவீனமுற்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவரது நிலைமை மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாகவும் 72 மணித்தியாலங்களுக்கு அவரது நிலைமை பற்றி எதுவும் கூறமுடியாது இருப்பதாக அச்செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன

கடந்த திங்கட்கிழமை ஏற்பட்ட திடீரென்ற தாக்குதலாலே இவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிவருகிறது. -சி

செப்ரிசீமியா கிறுமி மரணம்

(யாழ்ப்பாணம்)

செப்ரிசீமியா நோய் ஞாயிறு பீடிக்கப்பட்டு யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவந்த வரிணியை ஒருவர் நேற்றுக்கு மரணமானார்.

நீரங்கா நாராயணம் (வயது 12 என்ற சோப்பாய் வடக்கைச் சேர்ந்த கிறுமியே மரணமானவராவார். —சி

மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு நடாத்தப்படும் உற்பத்தி எழுச்சிவாரப் போட்டியாக

மாபெரும்
மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி

இடம் : நீர்வேலி மாட்டு வண்டிச் சவாரித்திடல்
காலம் : 24 - 04 - 1994 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பிற்பகல் 2-00 மணி

மாட்டுவண்டி உரிமையாளர்கள், பார்வையாளர்கள் அனைவரையும் கலந்துகொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

த. பொ. மே. நிறுவனம்,
யாழ். மாவட்டம்.
(ஏ-4013)

கணக்காளர் சேவையில் 3 தமிழர் மட்டுமே பதவி உயர்வு

(மானிப்பாய்)

இலங்கையில் கணக்காளர் சேவையைச் சேர்ந்த மூவர் 1ந் தர கணக்காளர்களாக கடந்த ஜூலை முதல் பதவி உயர்வு பெற்றுள்ளனர்

இவர்களில் யாழ் செயலக ஓய்வூதியப் பிரிவு கணக்காளரான கா. விரசிங்கம், யாழ். புகையிரவழங்குபகுதி உதவித் திட்டப் பணிப்பாளரான க. மகாலிங்கம், முல்லைத்தீவு கச்சேரி கணக்காளரான எஸ். லோகநாதநாலிங்கம் ஆகியோராவர்.

கணக்காளர் சேவை 1ந் தரத்துக்கு பதவி உயர்த்தப்பட்ட 236 பேரில் இம் மூவருமே தமிழர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது 71.

தேசிய பாடசாலைகளுக்கு இணைந்த கல்லூரிகள்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள பிரபல தேசிய பாடசாலைகளுடன் இணைந்த கல்லூரிகளை நாடு முன் ஏனைய பகுதிகளிலும் அமைக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

பிரபல பாடசாலைகளில் அனுமதிபெறுவதற்கு இருந்து வரும் நெருக்கடியை தவிர்ப்பதற்காகவே இந்த நடவடிக்கை என கல்வி வட்டாரங்கள். தெரிவித்தன. இந்த இணைந்த பாடசாலைகள் கொழும்பிலுள்ள எட்டிற்கும் மேற்பட்ட பிரபல பாடசாலைகளின் கிளைகளை கொண்டிருக்கும்.

இந்தவகை பாடசாலைகளுக்கு தேவையான காணியை பெறுவதற்கு தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றனவாம். இந்த இணைந்த கல்லூரிகளின் முன்னேற்றத்திற்கு தேசிய கல்லூரிகளின் அதிபர்களே பொறுப்பாயிருப்பர். -சி

இன்று

கன்னாகம் ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் தேவஸ்தான வருடாந்த திருவிழாவின் வசந்தோற்சவமும், கற்பக திருவிழாவும் இன்று காலை 6-00 மணிக்கு நடைபெறும். 24-ம் திகதி காலை 9-00 மணிக்கு தேர்த்திருவிழாவும், 25-ம் திகதி தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (ஈ)

தாய்மார்களே!!
கவலையை விடுங்கள்.....
பளிச்சிடும் வெண்மைக்கு
ரோயல் நீலம்
கடைகளில் விற்பனையாகும் நீலப் பைக்கட்டுகளைப்போல போலி நீலம் இல்லையென தமிழீழத்தில் உத்தரவாதம் கொண்டு விற்பனையாகிறது.
★ 100 ஆடைகளுக்கு ஒரு பைக்கட் ரோயல் நீலம் போதுமானது.
ஒரு பக்கெட் 6/50
ரோயல் இன்டஸ்ரீஸ்
பொன்னையா ஒழுங்கை,
ஆனைக்கோட்டை.
(ஏ-3964)

யாழ். வணிகர் கழகம்

(யாழ். வர்த்தகர் சங்கம்)

விசேட பொதுக்கூட்டம்

எதிர்வரும் 22-04-94 வெள்ளிக்கிழமை மாலை 2-30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் எமது சமூக வணிகப் பெரு மக்கள் அனைவருக்கும் ஓர் விசேட பொதுக்கூட்டம் நடைபெறும்.

மேற்படி கூட்டத்தில் அரசினர் துறையினர், நிதித்துறையினர் கலந்து கொள்வர்கள்.

எமது சமூக வணிகப் பெருமக்களின் வாணிபம் சம்பந்தமான பல பிரச்னைகள் ஆராயப்பட இருப்பதால் இக்கூட்டத்தின் முக்கியத்துவம் உணர்ந்து தாங்கள் நேரடியாக குறித்த நேரத்தில் சமூகம் கொடுத்து தங்கள் கருத்துக்களையும் தெரிவிப்பதுடன் அவர்களின் அறிவுரை, ஆலோசனையையும் பெற்று பயனடையுமாறு சங்கத்தின் சார்பில் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி. வணக்கம்.

யாழ். வணிகர் கழகம்

வே. சிற்சபேசன் — தலைவர்.
நா. த. அன்னலிங்கம் — செயலாளர்.
(ஏ 4018)

டிப்ளோமா நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவகத்தால் யாழ் மாவட்டத்தில் நடாத்தப்படும் 1994/95 ஆண்டுக்கான பகுதி கல்விப் படிப்பு டிப்ளோமா பயிற்சிக்கு விண்ணப்பித்த யாழ் வலயம் 1இல் அமைந்த பாடசாலைகளைச் சேர்ந்த விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகப்பரீட்சை இம்மாதம் 28ம் திகதி வியாழக்கிழமை காலை 9-00 மணிக்கு ஆரம்பமாகும். விண்ணப்ப தாரிகள் உரிய நேரத்திற்கு தேவையான ஆவணங்களுடன் வருகை தருமாறு யாழ்ப்பாணம் வலயம் 1 இல் கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். -சி

கோப்பாய் உவர் நிலத்தில் மண்நீர் ஆய்வுகள்!

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வெளியில் உவர் நில பிரதேசத்தில் பரீக்சார்த்த நெற்செய்கையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஏனைய நிறுவனங்களுடனும், விஞ்ஞானிகளுடனும் இணைந்து ஈடுபட்டு வெற்றி கண்டுள்ளது யாவரும் அறிந்ததே.

இந்த பிரதேசத்தில் மண், நீர் பற்றிய ஆய்வுகள் நடைபெறுவது இந்தப் பிரதேசத்தை முழுமையாக பயன்படுத்துவதற்கு வேண்டுவன அவசியமாகும்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் விஞ்ஞான ஆராய்ச்சி நிலையமும் இணைந்து தொடர்ச்சியாக இவ் ஆய்வுகளை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இரண்டு கிழமைக்கு ஒரு தடவை, மண் மாதிரிகளும் மண் அடியில் உள்ள நீர் மாதிரிகளும் எடுத்து ஆய்வு செய்யப்படுகின்றது. கடந்த இருபது வருடங்களுக்கு முன் வேளாண்மை செய்யப்பட்ட இப்பிரதேசம் உவராக மாறுவதற்கு பல காரணங்கள் இருக்கலாம்.

வயல் சொந்தக்காரர் அதிக காணியை இந் நிலங்களை நன்கு உழுது பராமரிக்காமல் விட்டதாலும், நிலங்கள் உழுதபடாது இருக்கலாம்.

மேலும் கடல்நீர் உள்புகுந்தமையினாலும் மேட்டு நிலங்களில் தோட்டம் தொட்டமாகக் காணப்படும் உப்புக்கள் கரைந்து சென்று இப்படியான இடங்களை அடைந்தமையாலும் வேலைகளிலிருந்து மண்ணின் மேற்பரப்பிலிருந்து நீர் ஆவியாகும்போது கீழ் உள்ள உப்புக்கள் மண்ணின் மேற்பரப்பினை அடைவதாலும், உவர் தன்மை ஏற்பட்டிருக்கலாம்.

இவ்விதமான நிலங்களில் பயிர் செய்வதற்கு ஏற்ற நன்நீரினை மாதிரிகளிலிருந்து தேடி வைத்து அம்மண்ணிலுள்ள உப்புக்களை கீழே முழங்கால் கூறுவதாக பாத்திகளை அமைத்தல் வேண்டும்.

மேலும் கூடுதலான சேதன பசளைகளை புகைத்து நிலத்தை பயன்படுத்த வேண்டும். இத்துடன் உவரை சகிக்கக்கூடிய பயிர் வகைகளை செய்கைபண்ணல் உதாரணமாக நெல்லில் பொக்கணி, உவர்தாங்கி போன்றவை நல்லினங்கள் எனது பிரதேசத்தில் உவர் நிலங்களில் செழித்து வளர்கின்றன. புதிய (AT 402) போன்ற நெல்லினங்கள் சில உவரை சகித்து வளர்ந்து கூடியன.

இப்பிரதேச மண், நீர் பற்றிய ஆய்வுகள் தொடர்ந்து நடைபெறுவதாக செய்யப்படுகின்றது. பரீக்சார்த்த நெற்செய்கை வெற்றியளித்தமையினால் விளைச்சல் அதிகரிக்கவும், முழுப்பிரதேசத்தையும் பயிர்ச் செய்கைக்கு உபயோகிக்கவும் வேண்டிய ஆய்வுகளை விரைவாக ஆராய்ந்து நிலைமைக்கு ஏற்ற வகையில் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

1500 பழமரக் கன்றுகள் 300 பேருக்கு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

பழமரச் செய்கைகளை ஊக்குவிக்கும்வகையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன விவசாயப் பகுதியினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். அதற்கு முன்னோடி நடவடிக்கையாக கிளிநொச்சிக் கோட்ட வடக்குப்பிரிவு பகுதியில் 300க்கு மேற்பட்ட பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு பழமரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

வழங்கப்பட்ட பழமரக் கன்றுகளில் 635 மாங்கன்றுகள், 353 தேங்காய்கன்றுகள், 308 பனங்கன்றுகள், 128 மாதுளங்கன்றுகள், 75 கொய்யாக்கன்றுகள் என்பன அடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது —

15 கோடி வருடங்களுக்கு முந்திய எலும்புக்கூடு

(லண்டன்)

லண்டனில் தொல்பொருளியலாளர்கள் 15 கோடி வருடங்களுக்கு முன் வாழ்ந்த தாவர ஒன்றின் எலும்புக்கூடு ஒன்றைக் கண்டுபிடித்துள்ளார்கள்.

சிறுவர்கள் படமேற்கு நகரமான கிரியூகவில் இவ் எலும்புக்கூடு கண்டுபிடிக்கப்பட்டதாக வெளியான செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டிலும் இதே பகுதியில் கோடிக்கணக்கான வருடங்களுக்கு முன்வாழ்ந்த பறவை ஒன்றின் எலும்புக்கூடு கண்டுபிடிக்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இக் கண்டுபிடிப்பானது மனித நாகரிகத்தில் மனிதரை வாற்றிக் தோற்றம் இங்கு தான் ஆரம்பித்திருக்கவேண்டும் என்பதனை வலியுறுத்தும் வகையில் உள்ளதாக தொல்பொருளியலாளர்கள் தெரிவித்தனர். (க-கி)

சொற்பொழிவு

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை உயரப்புலம் உத்தமர் விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த 16ந் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. எதிர்வரும் 24ந் திகதி தேர்த்திருவிழாவும் 25ந் திகதி தீர்த்தோற்சவமும் மறுநாள் சங்காபிஷேகம் இடம்பெறும்.

திருவிழா நாட்களில் மாலை. இந்துக்கல்லூரி ஆசிரியர் த. சிவகுமாரன் -'சந்தபுராணம்' பற்றிய தொடர் விரிவுரையை நிகழ்த்தி வருகிறார். -71

கோட்டக்கல்வி அபி. சபை

(அச்சுவேலி)

கோப்பாய் கல்விக்கோட்ட பாடசாலைகளின் கல்வித்தரத்தை மேம்படுத்துவதற்கு ஆசிரியர்களின் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதற்கு 'கோட்டக்கல்வி அபிவிருத்திச்சபை' நிறுவப்பட்டுள்ளது.

கோப்பாய் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. பொ. வீரபத்திரர் தலைமையில் செயற்படும் கல்வி அபிவிருத்திச்சபையில் பாடசாலை அதிபர்கள், தொகுதிக்கல்வி யோதனாதிகாரிகள், முதன்மை ஆசிரியர்கள் பதவிநிலை உறுப்பினர்களாக இணைக்கப்பட்டுள்ளனர். —74

ஆலய [illegible] மத்[illegible] நெற்றியில் புண்

(செங்கை)

தமிழகத்திலுள்ள சில ஆலயங்களில் பக்தர்களுக்கு வழங்கப்படும் குங்குமம் தரக்குறைவாக இருப்பதால் பலருக்கு நெற்றியில் புண் ஏற்பட்டுள்ளதாக புகார் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் இனிமேல் அந்தந்த ஆலயங்களிலேயே குங்குமம் தயாரித்து வழங்கவேண்டுமென்று தமிழ்நாடு அரசு தேவஸ்தானங்களுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது. 71-ஜ

இளைஞர் கடன் 5000 ரூபா வழங்க ஏற்பாடு

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் மாவட்ட இளைஞர் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் மூலம் அந்தந்தப்பகுதி பிரதேச செயலாளர் பிரிவு பிரதேசசபைமூலம் இளைஞர்கடன் வழங்கப்படவுள்ளது.

அபிவிருத்தி சங்கங்கள் சமாசத்துடன் தொடர்புகொண்டு முன்னுரிமை அடிப்படையில் ஐயாயிரம் ரூபாவை இளைஞர் கடனாகப் பெறலாம்.

சங்கங்கள் முன்னுரிமை அடிப்படையில் பெயர்களைக் கிராம செய்து செயலாளர், செயலாளர் ஒப்பத்தம் அனுப்புமாறும் ஒரு இளைஞனுக்கு ரூபா 5000 கடனாக வழங்கப்படும் எனவும் சமாசத் தலைவர் திரு. எஸ். முருகநேசன் கூறியுள்ளார். -154

வலி. மேற்குப் பகுதியில் வீதிகள் திருத்தம்

(கொழும்புத்துறை)

வலி மேற்கு பிரதேச சபைப் பகுதியைச் சேர்ந்த பல உள் வீதிகள் செப்பனிடப்பட்டு வருகின்றன.

தொல்புரம், சுழிபுரம், சங்கரத்தை, வல்லிபுரக்கோட்டையைச் சேர்ந்த சில வீதிகளும் ஆக்கூடுதலாக பழுதடைந்த சில வீதிகளும் திருத்தி செப்பனிடப்பட்டு வருகின்றன.

மேலும் வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்பட்டு கிடைத்துவந்த வீதிகள் விரைவில் செப்பனிடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. —154-கி

மேதினம் பற்றிய கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட பொதுஜன அமைப்புக்களின் ஒன்றியம் 1994 ம் ஆண்டின் 'மே' தின சம்பந்தமான எதிர்கால கருத்தரங்கும் ஆலோசனைக் கூட்டமும் நாளை 22 ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாண இந்துக்கல்லூரி குமாரசாமி மேலோர் மண்டபத்தில் நடைபெறும்.

மேற்படி கூட்டத்திற்கு சகல அரச, அரச சார்பற்ற பொது நிறுவனங்களின் தொழிற்சங்க உத்தியோகத்தர்களையும், கூட்டுறவுச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், வர்த்தகச்சங்கங்கள் அரச, தனியார் நிறுவனங்களின் தொழிற்சங்கங்களின் உத்தியோகத்தர்கள், அரச தனியார் கல்வி நிறுவனங்கள் அனைத்தையும் கலந்து கொள்ளும்படி அழைக்கப்படுகிறார்கள்.

மெய்வல்லுநர் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கழகங்களின் பிரதிநிதிகளுக்காக யாழ் மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம் நடாத்திவரும் மெய்வல்லுநர் சட்டங்கள் பற்றிய கருத்தரங்கு தொடர்ந்து இவ்வார விரிவுரைகள் எதிர்வரும் 23ம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் யாழ் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். — கி

அபிவிருத்தி திட்டக்கூட்டம்

(வருத்தித்துறை)

வசதியற்ற மிக்கவறந்த வடமராட்சி கிழக்கின் கடல் வளங்களை அபிவிருத்தி செய்வதற்கான அபிவிருத்தித் திட்டக்கூட்டமொன்று வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் திரு. என். வைரமுத்து தலைமையில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இக்கடல்வள அபிவிருத்தித் திட்டக்கூட்டத்தில் வடமராட்சி கிழக்கில் உள்ள 14 கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் கடற்றொழிலாளர் ஒன்றியப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தேசிய அடையாள அட்டைபெற விண்ணப்பிக்கவேண்டிய முறை

(மானிப்பாய்)

யாழ். மாவட்டத்திலிருந்து தேசிய அடையாள அட்டை பெறுவதற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப்படிவங்களை சரியான முறையில் பூரணப்படுத்தாமல் விடுவதனால் பலரது விண்ணப்பங்கள் கொழும்பு தலைமை காரியாலயத்திலிருந்து மீண்டும் யாழ்ப்பாண ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு திருப்பி அனுப்பி வைக்கப்படுகின்றன.

இது சம்பந்தமாக யாழ் ஆட்பதிவுத் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் சகல பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பி வைத்துள்ள சுற்று நிருபமொன்றில் விண்ணப்பதாரர்கள் படிவங்களை பூரணப்படுத்துகையில் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகளைப் பற்றி பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

இதில் முதல் தடவையாக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர் படிவம் அ (1)ஐ மட்டுமே பயன்படுத்துமாறும் இதில் முழுப்பெயரைக் குறிப்பிடுவதுடன் பிறப்புப்பத்திரத்தையும் இணைக்குமாறும்கேட்கப்பட்டுள்ளது. பிறப்பு பத்திரம் இல்லாதவிடத்து (பதிவு ஆ 33 என். ஆர்.) தேடுதல் விண்ணப்பம் இணைக்கப்படுவதுடன் பிறந்த திகதியை உறுதிப்படுத்திய ஒரு சத்தியக் கடதாசியையும் சமர்ப்பிக்கவேண்டும்.

திருமணமான பெண்களாகிய திருமணச் சான்றிதழ் அல்லது சமயசார முறைப்படி திருமணம் நடைபெற்றதற்கான சத்தியக்கடதாசி இணைக்கவும்.

முதியோர் : விண்ணப்பதாரர் 16 வயது முதல் 17 வயது வரை இருந்தால் 3 ரூபா பெறுமதியான முத்திரையும் 17 வயதிற்கு மேற்பட்டவராயின் 13 ரூபா பெறுமதியான முத்திரையும் ஒட்டி அதன் மேல் கையொப்பமிடுதல் வேண்டும்.

படம்: இதன் பின்னணி நடுத்தரச் சாயல் நிறமாக இருப்பதுடன் இடது காது தெரிதல் என்பன முழுமையாக தெரியவேண்டும்.

படத்தில் 4ம் பக்கத்தில் பிதா மாதாவின் அடையாள அட்டை இலக்கம் முழுப்பெயர் திகதி என்பன குறிப்பிடுதல் வேண்டும். தந்தையின் அடையாள அட்டை இல்லாதவர்கள் தந்தையின் தந்தையாரது அல்லது தந்தையுடன் பிறந்த சகோதரர்களது அல்லது விண்ணப்பதாரியுடன் பிறந்தோரது அடையாள அட்டை இலக்கம் முழுப்பெயர் என்பன குறிப்பிடல் வேண்டும்.

இரண்டாவது தடவையாக படிவம் 1ம் அடையாள அட்டை பெற விண்ணப்பிப்பவர்களது விண்ணப்பங்கள் ஆட்பதிவுத் திணைக்களத் தலைமைக் காரியாலயத்தில் பரிசீலனை செய்யப்பட்டு கண்டுபிடிக்கப்பட்டால் 250 ரூபாவுக்கு குறையாது குற்றப்பணம் அறவிடப்படுவதுடன் அடையாள அட்டை எடுப்பதில் காலதாமதம் ஏற்படுமென்றும் அச்சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. -71

சாவகச்சேரி மாணவனுக்கு தலைவரின் சிறப்புப் பரிசு

(யாழ்ப்பாணம்)

அன்னை பூபதி நினைவுப் பொது அறிவுத் தேர்வில் 6ம் ஆண்டுப்பிரிவில் தோற்றி தென்மராட்சி கோட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்ற சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவன் விவேகானந்தன் கோகுலனின் சிறப்பு ஆற்றலை பாராட்டி தமிழீழ தேசியத் தலைவரின் சிறப்புப்பரிசு நேற்று முன்தினம் தமிழீழக் கல்விக்கழக நடுவண் அலுவலகத்தில் நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சியில் வைத்து வழங்கப்பட்டது.

யாழ். வடக்கு வலயக் கல்விப்பணிப்பாளர் திரு. கே. கந்தசாமி மற்றும் கல்விமான்கள் மேம்பாட்டுப் பேரவையினர் கல்விக்கழக மாணவர் அமைப்பு உறுப்பினர்கள் வைத்து கொண்ட சிறப்பு நிகழ்ச்சியில் தமிழீழக்கல்விக் கழக துணைப் பொறுப்பாளர் திரு. வே. பாலகுமாரனால் தமிழீழத் தேசியத்தலைவரின் சிறப்புப்பரிசு 5000 ரூபா மாணவன் கோகுலனுக்கு வழங்கப்பட்டது.

கடந்த ஆண்டிலும் அன்னை பூபதி பொது அறிவுத்தேர்வில் 4ம் ஆண்டில் படித்துக் கொண்டு 7 ஆம் ஆண்டு தேர்வில் சிறப்புற எழுதி கோட்ட மட்டத்தில் முதல் இடத்தைப் பெற்றமைக்காக தமிழீழத் தேசியத்தலைவரின் சிறப்புப் பரிசையும் பாராட்டுதலையும் மாணவன் கோகிலன் பெற்றிருந்தான் என்பதும் குறிப்பிடத்தக்கது. — கி

"உரிமைகள் மறுக்கப்பட்டபோது ஆயுதப் போர் ஆரம்பமானது"

அரசண்ணா உரை

(யாழ்ப்பாணம்)

இந்த மண்ணில் வாழுகின்ற எமது மக்களின் உரிமைகளையும் அபிலாசைகளையும் சிறிலங்கா அரசுகள் ஏமாற்றப்பட்ட எமது இனம் கடந்த உரிமைகளை இழந்த நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டது. அன்றைய போராட்டம் அகிம்சை முறையில் நடத்தப்பட்டது.

நிராயுதபாணிகளான பூபதியின் ஆறாம் ஆண்டு நினைவு நாள் கூட்டத்தில் வைத்து கொண்டு உரையாற்றிய தமிழீழ அரசியல்துறைப் பணிமனை பொறுப்பாளர் திரு. அரசண்ணா இவ்வாறுதெரிவித்தார்

நூலகம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம் மன்றம்

மணிவாக்கு

இன்சொல் உமது இனிய வாழ்க்கை; பொறுமை உமது ஆஸ்தி. நேர்மை உமது வெற்றி. கோபம் உமது சத்துரு. உழைப்பு உமது உரிமை. அமைதி உமது ஆறுதல்.

– பரம்பரடி சிந்தர்

நமது நோக்கு

கணக்குப் பிழைக்கிறதா?

உல்லாசப் பயணிகள் இலங்கை வருமானமாக இருக்க வேண்டும் என மேற்கு நாடுகளின் தூதுவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளார்கள்.

எல்லாளன் படையின் எச்சரிக்கையைத் தொடர்ந்து மேற்கு நாட்டுத் தூதுவர்கள் கொழும்பிலே அவசரமாகக் கூடி ஆராய்ந்திருக்கிறார்கள்.

அரசோ, இப்படி ஒரு படையே இல்லை என விஷயத்தை மூடிமறைத்து உல்லாசப் பயணிகள் விடுதிகளுக்கு மேலாக பாதுகாப்புப் பேணப்படுகிறது என கதைகள் பேசக் கிடப் பிரசாரம் செய்தது.

இலங்கை அரசின் பாதுகாப்புச் செலற்பாடுகளில் வெளிநாடுகளுக்கு நம்பிக்கை இல்லையா?

அவர்கள் கூடி விவாதித்துக் கண்ட முடிவு இல்லை என்பது வெட்டவெளிச்சமாகிவிட்டது.

அத்தோடு, உல்லாசப் பயணத்துறை அமைச்சர் தொண்டமானை அவர் போடு வரலாற்றுச் சமாதி செய்து கொண்டதாகப் பரபரப்பான செய்தியும் வெளிவிட்டார்கள்.

தொண்டமான் தனது கட்சிப் பிரச்னைகளைத் தீர்க்க வைத்த நிபந்தனைகளிற்றான்பேகிஇருப்பார். இலங்கையின் அடிப்படைப் பிரச்னைகள் இவர்கள் சந்திப்பால் தீர்ந்து விடவில்லை என்பதையும் தூதுவர்கள் உணரவில்லை இருப்பார்களா?

இலங்கையின் உண்மையான நிலையைத் தமது நாட்டுப் பயணிகளுக்கு முற்றாகத் தெரிவிப்பது அவசியம் எனத் தாம் கருதுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்கள்.

அரசின் பிரசார இயந்திரம் மூலம் பேசப்படும் மாயத்திரையை நம்பி ஏமாற வேண்டாம் என்பதுதான் எச்சரிக்கையின் அர்த்தமல்லவா?

மாயமான் காட்டி ஆக்கங்கள் வெறும் போக்கு இலங்கை அரசுக்கு இன்றல்ல, இராமாயணகாலம் தொட்டே இருக்கிறது என்பதை அவர்கள் புரிந்தவர்களா இருப்பார்களா?

கிழக்கிலே தேர்தல் நடாத்திக் காட்டி, ஆயுதங்களை இறக்குமதி செய்து வடக்கின் வாலை அடக்கி விடலாம், தெற்கிலே அன்னியச் செலாவணியைப் பெற்று வளம் காணலாம் என்று பேரிட கணக்குப் பிழைக்கிறதா?

★ ஆகதிகள் தங்கியிருந்த அரங்கு மீது படையினர் பீரங்கித்தாக்கு; 25 பேர் பலி

(ஸிகாலி)

றுவாண்டாவில் நாநூற்றுக்கும் மேற்பட்ட அகதிகள் தங்கியிருந்த தேவாலய வளாகத்தில் றுவாண்டா இராணுவத்தினர் அண்மையில் பீரங்கித் தாக்குதல் நடாத்தியதில் குறைந்தது 25 பேர் வரையில் கொல்லப்பட்டனர். 50 பேர் வரையில் காயமடைந்துள்ளனர்.

இதற்கிடையே றுவாண்டா போராளிக் குழுக்களிடையே யுத்த நிறுத்தமொன்றை மேற்கொள்ளுமாறு ஆபிரிக்க தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

மேலும் எதிர்வரும் சனிக்கிழமை இரு தரப்பாருக்கும் இடையில் யுத்த நிறுத்தம் ஏற்படுத்துமுயற்சியில் தான் ஈடுபட்டுள்ள நாடு ஈடுபட்டுள்ளதும் இன்று குறிப்பிடத்தக்கது.

றுவாண்டாவிலிருந்த இரு வாரங்களாகத் தொடரும் யுத்தத்தினால் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டதாக ஆமெரிக்க மனித உரிமைகள் அமைப்பு ஐ. நா. வுக்கு அனுப்பிய செய்தியில் தெரிவித்துள்ளது. –ஈ

புதிய சககை வெள்ளோட்டம்

(கொழும்புத்துறை)

கொக்குவில் கொட்டியம்பதி அருள்மிகு ஸ்ரீ ஆதிமுத்துமாரி அம்பாள் கோவிலுக்கு புதிய தேர் ஒன்று செய்யப்பட்டுவருகிறது.

இப்பணி ஆலயப்பரிபாலன சபையினர், ஊர் மக்களின் பெருமுயற்சியால் ஆரம்பிக்கப்பட்டு எதிர்வரும் 25 ம் திகதி திங்கள்கிழமை தேதி திருவிழாவுக்கு பூரணை தினத்தன்று வெள்ளோட்ட நிகழ்வு நடைபெறவுள்ளது] (154)

மருந்து நட்டுயாடு

(நெல்லியடி)

வருத்தித்துறை அரசினர் ஆஸ்பத்திரியில் முக்கிய வருத்தங்களுக்கு பெரும் நட்டுயாடு நிலவுகிறது.

பனடோல், பிறிதரோன், அம்பிசிலின், கொலரா நடுப்பு மருந்தான டரோஸ் காக்கஸ் போன்ற மருந்துகளே இவ்வாறிருக்கிறது 190

ராம்தாஸ் விடுதலை

(சென்னை)

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் எஸ் ராமதாஸ் நேற்றுமுன்தினம் மதுரை சிறையிலிருந்து விடுதலைசெய்யப்பட்டார்.

கடந்த மாதம் திருநெல்வேலியில் தனது கட்சியின் முக்கிய உறுப்பினர் மீது செய்யப்பட்டமையை கண்டித்து வீதி மறியல் செய்ய முற்பட்டபோது இவர் பொலிசால் கைதுசெய்யப்பட்டது தெரிந்ததே. க-கி

‘ஈஸ்ட்’ உற்பத்தி

(யாழ்ப்பாணம்)

பான், கேக் போன்ற உணவுப் பண்டங்களைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஈஸ்ட் (மதுவம் என்னும் பொருளை உள்ளூர் மூலவளங்களிலிருந்து உற்பத்தி செய்வதற்கு தமிழீழ பொருளியல் மேம்பாட்டு நிறுவனத்திடமே, தென்னை வள ஆய்விருக்கிறதி வதுதியாக மேற்கொள்ளப்பட்ட பரீட்சார்த்த முயற்சி வெற்றிகரமான பெறுபேறுகளைத் தந்துள்ளது.

இதன் தொடர் நடவடிக்கையாக வர்த்தக ரீதியில் ஈஸ்ட் (மதுவம்) உற்பத்தி செய்வது பற்றியும் ஆராயப்பட்டு வருகிறது.

சான்றிழ் வழங்கப்படுகின

(கரவெட்டி)

கோப்பாய் மக்கள் நலன் காக்கும் பிரிவுத் தலைமைச் செயலகத்தில் கடந்த 16 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கடந்த ஆண்டு தைமாதம், சுருக்கெழுத்து, அடிக்கெழுத்து ஆகிய பயிற்சி வகுப்புகளில் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு சான்றிழ்கள் வழங்கப்படுகின.

அத்துடன் நடப்பு வருடத்திற்கான பயிற்சி வகுப்பை கோப்பாய் பிரதேசசெயலர் திரு. உதயதேவராஜா திரு. பாலகுமாரமணியம் ஆரம்பித்து வைத்தார். -72

சிறுவர் நூல்நிலையம்

(அச்சுவேலி)

அச்சுவேலி மகா வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் அமரர் எஸ் எஸ். துரைசிங்கத்தின் ஞாபகார்த்தமாக வைரவித்தியாலய ஆரம்பப்பிரிவில் "சிறுவர் நூல்நிலையம்" திறந்துவைக்கப்பட்டது.

கடந்த 16ம் திகதி அச்சுவேலி தெல்லிந்திய திருச்சபைத் தேவாலயத்தில் நடைபெற்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையை அடுத்து "துரைசிங்கம் சிறுவர் நூல் நிலையம்" திறந்துவைக்கப்பட்டது. 74

கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தில் 92ம் ஆண்டுடன் 25 வருடங்கள் சேவை வழங்கிய ஊழியர்கள் கூட்டுத்தாபனச் சின்னம் பொறித்த தங்கப்பதக்கம் இம்மாதம் 24ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை கேட்போர் கூடியாலயத்தில் வாழ். மாவட்ட அரசாங்க அதிபர் வ. வரணியசிங்கம் அவர்களால் கௌரவிக்கப்படுவர். (வி)

கரவெந்தாட்டப் இறுதிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கரவெந்தாட்ட போட்டியின் இறுதி நாள் நிகழ்வு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு யாழ் சிவோவாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக திரு. இ. வேலாயுதம் கலந்து கொள்கின்றார். -சி

‘நரோமா’ பயணிகளுக்கு

(யாழ்ப்பாணம்)

26 - 04 - 1994-ம் திகதி 'நரோமா' கப்பலில் பயணம் செய்வதற்கு பணம் செலுத்திய பயணிகள் 30-04-1994 ம் திகதி சனிக்கிழமை பயணம் செய்வதற்கு அனுமதி கிடைத்துள்ளது. இன்னமும் பணம் செலுத்தாத தவறியவர்கள் பணத்தைச் செலுத்தும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

10 - 05 - 94 ம் திகதியும், 24 - 05 - 94ம் திகதியும் 'நரோமா' கப்பல் சேவை நடைபெறவிருப்பதால், 10 - 05 - 1994 - ம் திகதி பயணம் செய்ய விண்ணப்பித்த அரச ஊழியர்களையும், பல்கலைக்கழக மாணவ, மாணவிகளையும், உடனடியாக செயலகத்திற்கு வந்து பணத்தைச் செலுத்தும்படி அரச அதிபர் கேட்டுக்கொள்கிறார். (162-வி)

உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

(பருத்தித்துறை)

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவன விளையாட்டுக்கழகம் வடமராட்சியில் 11 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்றை ஆரம்பித்துள்ளது. இவ்உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயக் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றன. 24 விளையாட்டுக்கழகங்கள் இச்சுற்றுப்போட்டியில் கலந்துகொள்கின்றன. —53

மாதாந்த கலைநிகழ்வு

(ஆனைப்பந்தி)

நாவற்குழி லவனிதா குடிருப்பில் இயங்கும் சிறுவர் பூங்காவுக்கு மரமமைப்பு பூங்காவில் மாதாந்த கலைநிகழ்வும் கூட்டமும் அண்மையில் நடைபெற்றது.

பூங்கா நிர்வாகி மு நகேசராஜாவின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நாவற்குழி சீன்நகர் குடியேற்றத்திட்ட பொறுப்பாளர் திரு. விடுதலை, திரு வசீகரன், கிராம நல சேவையாளர் செல்வி இராஜேஸ்வரி, லவனிதா குடியிருப்புப் பொறுப்பாளர் திரு. தேவன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்கள். -101

புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994-04-21 வியாழன் இரவு

8-01 – சொக்லுங்கள் பாடல்கள்
8-10 – உரை "பாரதி செய்த புரட்சி எது"
8-20 – உழைப்போம் உயர்வோம் நிழ்ச்சியில் "கடலில் மகிழுவை மீன்கள்" சித்திரம்
8-30 – செய்திகள்
8-40 – வாரதிராசன் நினைவாக சிறப்புநிழ்ச்சி "புரட்சிக்குயில்"
8-50 – மலரும் மொட்டுக்கள்

1994-04-22 வெள்ளி காலை

7-02 – மாவீர வணக்கம்
7-15 – விடுதலை வானலையில்
7-45 – செய்திகள்
7-50 – பத்திரிகைச் செய்திகள்
7-55 – தமிழக பாடல்

அகையாள உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

இந்திய ஆக்கிரமிப்பாளர்களுக்கெதிராக ஆஹிம்சைப் போர் தொடுத்து திலீபன் மரணமடைந்த அன்னை பூபதியின் ஆறாம் ஆண்டு நினைவாக தமிழீழ பொருளாதார மேம்பாட்டு நிறுவன முதன்மைச் செயலகத்தில் கடந்த 18 ம் திகதி அடையாள உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது.

இவ்வடையாள உண்ணாவிரதத்தில் தமிழீழ பொருளாதார மேம்பாட்டு நிறுவன பணியாளர்களும் பேராளிகளும் உணர்வுபூர்வமாக கலந்து கொண்டனர்.

இன்று

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ ராகவேந்திரர் சுவாமிகள் மிருதிகா பிருந்தாவனம் மாதாந்த இசை வழிபாடு இன்று 21 ம் திகதி பிற்பகல் 4.30 மணிக்கு கோவிலடி நல்லூரில் நடைபெறும்.

★ ★

(யாழ்ப்பாணம்)

இணுவில் – கோண்டாவில் மஞ்சத்தடி அருணகிரிநாதர் சிவசுப் பிரமண்ய சுவாமி கோவில் வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றுதுடன் ஆரம்பமாகி மேலாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், 2ம் திகதி திங்கள்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

★ ★

(யாழ்ப்பாணம்)

வாழ் மாவட்டத்தில்உருளைக் கிழங்கு சேமித்து வைப்பதற்கான அறிமுகவிழா இன்று பிற்பகல் 4 மணிக்கு ஊரெழுகிழக்கு திரு. இ. விஜயரத்தினின் தோட்டத்தில் நடைபெறவுள்ளது. – 162

★ ★

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை, சண்டிலிப்பாய் கல்வி கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகளுக்கு ஆண்டு இரண்டுக்கு கல்வி பயிற்றும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வருகிற ஞாயிறு இன்றும், நாளையும் நாளை மறுதினமும் 21, 22, 23) முறையே மருதனாமடத்திலுள்ள பூனியன் கல்லூரியிலும், காங்கேசன்துறை கல்லூரியிலும் நடைபெறுவதென கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் குறிப்பிட்டுள்ளார்.

இராசி பலன்

21-4-1994

வியாழக்கிழமை

(தமிழுக்கு சித்திரை 8)

நாமி பி. ப. 12-43 வரை மேலும் மு. இ. 11-12 வரை; இராகுகாலம் நண்பகல் 1-31 முதல் 3-01 வரை சுபநேரம் காலை 7-31 முதல் 9-01 வரை அமிர்தநேரம்

மேடம்: குடும்ப விரோதம் மறதி, ஆன்மீகசிந்தனை.

இடபம்: பணவரவு முயற்சி, வைத்திய செலவு, மனச்சுமை மிதுனம்: விரோத சிந்தனை பணவரவு, உல்லாசம்.

கடகம்: மனவிரக்தி. கடன் பயம், ஆலோசனை.

சிங்கம்: விருந்துபசாரம், தொழில் பராமரிப்பு, காரிய சித்தி.

கன்னி: முயற்சி தோல்வி, கடும் விவாதம், ஆரோக்கியவுணவு

துலாம்: முகஸ்துதி, வக்கு சுத்தமை, பயண நன்மை.

விருச்சிகம்: வெளியூர் நகர்வு, காரியசித்தி, புதுப் பொருள் சேர்க்கை.

தனுசு: கண்டிப்பு, குடும்ப சிக்கல், வருவாய் குறைவு.

மகரம்: சகோதர வகை, அமைதியுறவு, வயிற்றுக் கோளாறு.

கும்பம்: பெரியோர் ஆசி, புதிய ஸ்தானம் கொலுதி.

மீனம்: பொது ஜனங்களிடம், தான தர்மம், வீண்செலவு சந்தோசம்.

– ஜோசியர்.

ஒரு மழை பெய்ய வான் உயர் மரம் நடு

கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தில் 92ம் ஆண்டுடன் 25 வருடங்கள் சேவை வழங்கிய ஊழியர்கள் கூட்டுத்தாபனச் சின்னம் பொறித்த தங்கப்பதக்கம் இம்மாதம் 24ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை கேட்போர் கூடியாலயத்தில் வாழ். மாவட்ட அரசாங்க அதிபர் வ. வரணியசிங்கம் அவர்களால் கௌரவிக்கப்படுவர். (வி)

கரவெந்தாட்டப் இறுதிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கரவெந்தாட்ட போட்டியின் இறுதி நாள் நிகழ்வு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு யாழ் சிவோவாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக திரு. இ. வேலாயுதம் கலந்து கொள்கின்றார். -சி

‘நரோமா’ பயணிகளுக்கு

(யாழ்ப்பாணம்)

26 - 04 - 1994-ம் திகதி 'நரோமா' கப்பலில் பயணம் செய்வதற்கு பணம் செலுத்திய பயணிகள் 30-04-1994 ம் திகதி சனிக்கிழமை பயணம் செய்வதற்கு அனுமதி கிடைத்துள்ளது. இன்னமும் பணம் செலுத்தாத தவறியவர்கள் பணத்தைச் செலுத்தும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

10 - 05 - 94 ம் திகதியும், 24 - 05 - 94ம் திகதியும் 'நரோமா' கப்பல் சேவை நடைபெறவிருப்பதால், 10 - 05 - 1994 - ம் திகதி பயணம் செய்ய விண்ணப்பித்த அரச ஊழியர்களையும், பல்கலைக்கழக மாணவ, மாணவிகளையும், உடனடியாக செயலகத்திற்கு வந்து பணத்தைச் செலுத்தும்படி அரச அதிபர் கேட்டுக்கொள்கிறார். (162-வி)

உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

(பருத்தித்துறை)

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவன விளையாட்டுக்கழகம் வடமராட்சியில் 11 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்றை ஆரம்பித்துள்ளது. இவ்உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயக் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றன. 24 விளையாட்டுக்கழகங்கள் இச்சுற்றுப்போட்டியில் கலந்துகொள்கின்றன. —53

மாதாந்த கலைநிகழ்வு

(ஆனைப்பந்தி)

நாவற்குழி லவனிதா குடிருப்பில் இயங்கும் சிறுவர் பூங்காவுக்கு மரமமைப்பு பூங்காவில் மாதாந்த கலைநிகழ்வும் கூட்டமும் அண்மையில் நடைபெற்றது.

பூங்கா நிர்வாகி மு நகேசராஜாவின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நாவற்குழி சீன்நகர் குடியேற்றத்திட்ட பொறுப்பாளர் திரு. விடுதலை, திரு வசீகரன், கிராம நல சேவையாளர் செல்வி இராஜேஸ்வரி, லவனிதா குடியிருப்புப் பொறுப்பாளர் திரு. தேவன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்கள். -101

யாழ்ப்பாணம்

★ கொழும்பிலிருந்து
வடக்கேவரும் பொருட்களுக்கு கப்பல் கட்டணம் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்துவடபகுதிக்கு கப்பல் மூலம் எடுத்து வரும் பொருட்களுக்கான கட்டணங்கள் மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

முன்னர் ஒரு மெ. தொ. பொருட்களுக்கு 1200 ரூபாவாகக் கட்டணமாக அறவிடப்பட்டது தற்போது இக்கட்டணம் 3500 ரூபாவாக அரசினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இவ்வாறு அத்தியாவசியப் பொருட்கள் மீது கப்பல் கட்டணம் அறவிடப்பட்டபோது பலத்த எதிர்ப்பு கிளம்பியதைத்தொடர்ந்து அவை மீதான விசேட அதிகரிப்பு நீக்கப்பட்டது. தற்போது கப்பல் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதால் மீண்டும் இதற்கான கட்டணத்தை பொதுமக்களிடமே அரசு அறவிடுமோ என்ற அச்சம் எழுந்துள்ளது. வி-சி

பட்டதாரி பயிலுனர் ஆசிரியர் நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களை மாகாண பொதுச் சேவைக்கு ஆட்சேர்க்கும் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் கல்வித்திணைக்களம் வலயம் 1ல் இம்மாதம் 26, 28, 29, 30ம் திகதிகளில் காலை 9 மணியிலிருந்து நேர்முகப்பரீட்சை நடைபெறும்.

விஞ்ஞானப் பட்டதாரிகள் 26ம் திகதியும், பௌதிக விஞ்ஞான பட்டதாரிகள் - 26, 28, 29-ம் திகதிகளிலும் விஞ்ஞானப் பட்டதாரிகள் - 29, 30ம் திகதிகளிலும் சமுகமளிக்கவேண்டும். நேர்முகப்பரீட்சைக்கான அழைப்புக்கள் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளன.

நேர்முகப்பரீட்சைக்கு வருபவர்கள் கீழ்வரும் ஆவணங்களின் மூலப் பிரதியைக் கொண்டு வரவேண்டும்.

தேசிய அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ் நீதிமன்றினால் பிறப்பித்த பிறப்புக்கு மூன்று வருடம் வரைக்கான நிரூபிப்பதற்கான ஆவணங்கள், பிரதேச செயலாளரின் மேலொப்பமிடப்பட்ட கிராம சேவையாளர் சான்றிதழ், அங்கமயில் பெறப்பட்ட நற்சான்றிதழ்கள் இரண்டு. ஏனைய தகுதிகளை நிரூபிப்பதற்கான ஆவணங்கள், கற்பித்தல் அனுபவங்கள் இருப்பின் அதற்கான ஆவணங்கள். (சி)

ஷார்ஜா கிரிக்கெட்:
இந்தியா — பாகிஸ்தான் இறுதியாட்டத்தில் மோதும்

(ஷார்ஜா)

ஷார்ஜாவில் நடைபெறும் ஒஸ்ரேலேசியா கிண்ண கிரிக்கெட் போட்டியில் இறுதியாட்டத்தில் பாகிஸ்தானும்-இந்தியாவும் மோதவிருக்கின்றன.

நேற்று நடைபெற்ற அரை இறுதிப்போட்டியில் பாகிஸ்தான்-நியூஸிலாந்தை 61 ஓட்டங்களால் வெற்றி பெற்றது இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 2 விக்கெட் நஷ்டத்துக்கு 328 ஓட்டங்களைப் பெற்றது.

இன்சமாம் உல் ஹக் ஆட்டமிழக்காது 137 ஓட்டங்களையும், சலீம் சுஹைப் 134 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஒருநாள் சர்வதேச கிரிக்கெட்போட்டியில் பாகிஸ்தான் இப்போட்டியில் பெற்ற 328 ஓட்டங்களே மிகக்கூடுதலான ஓட்டங்களாகக் கணிக்கப்பட்டுள்ளது.

நியூஸிலாந்து 50 ஓவர்களில் 7 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 266 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையிலான இறுதியாட்டம்நாளை நெல்லிக்கிழமை நடைபெறும். வி-சி

வெளிநாட்டு
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நோர்வே, சுவிஸ், யப்பான், ஆஸ்திரேலியா உட்பட 20க்கும் மேற்பட்ட நாடுகளின் தூதர்கள் சந்தித்தனர். கொழும்பில் இடம் பெற்ற குண்டு வெடிப்புகளையும், எல்லாவன் படை விடுத்துள்ள எச்சரிக்கையையும்தொடர்ந்து எழுந்துள்ள நிலைமை குறித்து அமைச்சர் ஹமீத் இந்த தூதர்களிடம் விளக்கி கூறினார்.

இச்சந்திப்பின் போதுவெளிநாட்டு தூதர்கள் அமைச்சரிடம் பல கேள்விகளையும் எழுப்பினர். இச்சந்திப்பில் படை உயர் அதிகாரிகளும் உள்ளாடுவணத்துறை அரச அதிகாரிகளும் கலந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

தமிழக எதிர்க்கட்சியினர் உண்ணாவிரதம்

(சென்னை)

தமிழ்நாடு சட்டசபையில், ஜனநாயக முறையில் இயல்பும் வாய்ப்பு தமக்கு மறுக்கப்படுவதாகக் குற்றஞ்சாட்டி, தமிழ்நாட்டு சட்டசபை எதிர்க்கட்சி தலைவர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் தலைமையில் இந்திரா காங்கிரஸ்கட்சி சட்டமன்ற உறுப்பினர் ஏழுபேர் சென்னை மெரீனாகடற்கரையில் நேற்று முதல் காலவரையற்ற உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர்.

தமது கோரிக்கை நிறைவேறும் வரை இந்த உண்ணாவிரதம் தொடரும் எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

இதேவேளை உண்ணாவிரதம் இருப்பவர்களை எம். ஜி. ஆர். அ. தி. மு. க உறுப்பினர்களும், ஜனதாகட்சி உறுப்பினர்களும் சென்று பார்த்து ஆறுதல் கூறினர். ஜனதா கட்சித்தலைவர் திரு சுப்பிரமணியசுவாமி உண்ணாவிரதம் இருப்பவர்களின் உயிரை காப்பாற்றும்படி பிரதமர் நரசிம்மராவிடம் தொலைபேசி மூலம் கேட்டுக்கொண்டார். (வி-சி)

இன்ரபோல் உதவியை இலங்கை நாடும்
(கொழும்பு)

அண்மையில் கொழும்புத் துறைமுகத்தில் வைபேற்றப்பட்ட விஷவாயு இரசாயனம் கொண்ட நான்கு சிலிண்டர்கள் குறித்து துப்புத் துலக்க இலங்கை அரசு 'இன்ரபோல்' பொலிசாரின் உதவியை நாடியுள்ளது.

இதுகாறும் சிலிண்டர்கள் பம்பாய்நகரிலிருந்து இஸ்ரேலுக்கு செல்லும் வழியில் கொழும்பு துறைமுகத்தில் வைத்து கைப்பற்றப்பட்டது.

இலங்கை துறைமுகத்தூடாக இந்திய மாலுமிகளால் இஸ்ரேலுக்கு விஷவாயு சிலிண்டர்களை அனுப்பி வருவதாக இலங்கை அரசு தகவலறிகிறது. இதன் உண்மை நிலையை கண்டுபிடிக்கவே 'இன்ரபோல்' பொலிசாரின் உதவி நாடப்பட்டுள்ளதாம். (ம-சி)

மட்டக்களப்பில் பெண்கள் மீது இராணுவம் பலத்த கெடுபிடி

(மட்டக்களப்பு)

மட்டுநகரில் இராணுவத்தினரின் கெடுபிடிகளை, பெண்கள் மீது அதிகரித்துக்காணப்படுவதினால் பெண்கள் மாலை

புலிகள் மீதான
(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழகத்தில் மட்டுமல்லாது நாட்டுக்கு வெளி மாநிலங்களிலும் இயங்கிவரும் பயங்கரவாத அமைப்புகளுடன் புலிகள் தொடர்பு வைத்துள்ளனர் தமிழகத்தில் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு புலிகளை தடைசெய்ய வேண்டுமென அரசியல் ஏற்பட்டுள்ளது. தமிழக அரசு இந்தத் தடையை விதித்தாலும் மற்ற மாநிலங்களில் இருந்து கொண்டு அவர்கள் தொடர்ந்தும் இந்தியாவின் ஒற்றுமைக்கும் இறையாண்மைக்கும் அச்சுறுத்தல் செயல்களில் ஈடுபடக் கூடும்.

இதனால் மத்திய அரசே இந்தத் தடையை இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கவேண்டும். அ. தி. மு. க. அரசு பதவி ஏற்றபின் புலிகள் இயக்கத்தை பூண்டோடு ஒழித்து விடுவோம் முதலவர் கூறினார்.

இந்த தீர்மானத்தின்மீது தி. மு. க. 1ன் உறுப்பினர் திரு பரிதி இளம்வழுதி கேட்ட சில கேள்விகளை பேரவைத் தலைவர் கவனக்குறிப்பில் இருந்து நீக்கினார். இதைபடித்த பேரவையிலிருந்து திரு. பரிதி இளம்வழுதி வெளி நடப்பு செய்தார். —வி

மட்டுநகர்
(1ம் பக்கத் தொடர்ச்சி)

வயோதிபர் உயிரிழந்தார். 15திற்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். இதை பயந்து இப்பகுதியில் 56 வீடுகளை முற்றாக எரித்து நாசம் படுத்தினர்.

இச்சம்பவம் பற்றி எழுந்த பலத்த கண்டனங்களையடுத்து சம்பந்தப்பட்ட இராணுவத்தினர் மீது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இதன் முதற்கட்டமாக சில இராணுவத்தினர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் பகுதி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை இராணுவத்தினர் முன்னர் நடாத்திய பல தாக்குதல் பற்றிய விசாரணைகள் இழுத்தடிக்கப்பட்டு பின்னர் அவை கைவிடப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. -ம-சி

தமிழக அரசு
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒழுங்குகளும் சீர்குலைந்து விட்டது. விடுதலைப்புலிகளின் நடமாட்டம், தமிழ்நாட்டில் மீண்டும் அதிகரித்துள்ளது தமிழகத்தில் காவல்துறையினர் குற்றவாளிகளுக்கு ஆதரவு வழங்கிவருகின்றார்கள் மாநில அரசும் மக்களுக்கு பாதுகாப்பு வழங்காது விட்டுவிட்டது விடுதலைப்புலிகள் விடயத்தில் மாநில அரசு கடுமையாக நடந்துகொள்வதில்லை.

புலிகள் மீதான தடையுத்தரவை நீடிப்பதற்கு தமிழ்நாடு அரசு சம்மதம் காரணங்களை மத்திய அரசுக்குத் தெரிவிக்கவில்லை என்றும் கூறினார். வி-சி

மனித உரிமைகள்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மரணவர்கள் காணாமல் போனது பற்றியும் சூழல் கற்றனிந்த எலும்புக்கூடு விவகாரம் பற்றியும் மனித உரிமைக் குழுக் கூட்டத்தில் கேள்வி எழுப்பிய போது இலங்கையில் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட சட்டமா அதிபர் திலக் மாரப்பன இது பற்றி நீதி சம்பந்தமான விசாரணைகள் நடாத்தியதற்கு அரசு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது என்று குறிப்பிட்டார்.

ஆனால் இதுவரை அப்படியான நடவடிக்கைகளை ஏன் எடுக்கவில்லை என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கிம் லால் கமவிதரணா தனது கேள்வியில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விவாதத்தை நாடாளுமன்றத்தில் எழுப்பிய போது பிரதான மத்திய சபையில் இருக்கவில்லை என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ம-சி

எல்லாளன் படை குறித்து
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்துக் கொள்ளாவிடினும் அரசு தரப்பு இது குறித்து ஆழ்ந்த கவனம் செலுத்துகிறது' வெளிநாட்டவர்களும், வந்தாட்டு தூதரகங்களும் விளக்கமளிப்பதே போதும், போதும் என்றாகி விடுதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை 'எல்லாளன் படை' எச்சரித்திருப்பது போல் தாக்குதல் ஏதும் நடைபெறாது இலங்கையின் பொருளாதார நிலையே சூனியமாகிவிடும் என்றும் கருதப்படுகிறதாம். (சி)

சர்வஜன வாக்கெடுப்பு
ஒத்திவைப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு இணைப்பு தொடர்பாக நடைபெறவிருந்த சர்வஜனவாக்கெடுப்பு மீண்டும் ஒத்திவைக்கப்படுகிறது.

இது குறித்து ஜனாதிபதி செயலகம் நேற்று விடுத்த அறிக்கையில், கிழக்கில் வேட்பு 26-ம் திகதி வரையும் வடக்கில் யூலை 14-ம் திகதிவரையும் இவ்வாக்கெடுப்பு ஒத்திவைக்கப்படுகிறதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் விரைவில் சர்வஜன வாக்கெடுப்பு நடாத்த அரசு முதலில் திட்டமிட்டிருந்ததும் தெரிந்ததே.

கடற் பகுதியிலிருந்து
பீரங்கித் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

வாகரைநகர் பொன்னாங்கண்டி பிரதேசத்திலிருந்து கடற்படையினர் நேற்றுமாலை

அமைச்சர்
(1ம் பக்கத் தொடர்ச்சி)

வெளியே குறைக்க நடவடிக்கை எடுக்கப்படுமென அமைச்சர் ஹமீத் நேற்று தெரிவித்தார்

இக்கூட்டத்தில் வந்து சேர்ந்த இந்திய குழுவிற்கு இந்திய வெளியுறவு அமைச்சர் திரு.எம்.திவேஷிக் தலைமை தாங்குவார். -வி

6 மணியிலிருந்து இரவு 8மணி வரை சுமார் இரண்டு மணி நேரம் கரையோரப் பகுதியை நோக்கி பீரங்கித் தாக்குதல் மேற்கொண்டனர்.

தொடர்ச்சியாக இடம் பெற்ற இப் பீரங்கித் தாக்குதலால் அராலி, பொன்னாங்கண்டி பகுதியில் கடற்றொழிலுக்கு சென்றோர் தொழிலை நிறுத்தினர்.

வாகரைநகர் இராணுவமுகாமில் இருந்து துப்பாக்கி மேற்கொள்ளும் தீர்க்கப்பட்டது. -வி

மன்னாரில்
(1ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளன.

கடந்த திங்கட்கிழமை மாலை 11 மணியளவில் இரு புக்காரவும் ஒரு பொமமருமாக வந்து தலைப்புலி வீதியில் கடுப்பாக்கியிலுள்ள கிராமங்கள் மீது பல குண்டுகளையும், ரொக்கெட் தாக்குதல்களையும் கடுந்தாக்குதல் மேற்கொண்டன.

இறந்தவர்களில் ஒருவர் புகுந்தீவைச் சேர்ந்தவரும் தற்போது சின்னப் பண்டிவிச்சானில் வசிப்பவருமான 20 வயதான பரிஞ்ஞ சேகர் என அடையாளம் காணப்பட்டுள்ளது. -வி-ம-சி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் கூட்டுறவுத்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/B